# Chapter 1 ஆற்றங்கரை அரசுகள்

---

அ. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**Question 1.**
சேர, சோழ, பாண்டியர்கள் ________ என அழைக்கப்பட்டனர்.
அ) நாயன்மார்கள்
ஆ) மூவேந்தர்கள்
இ) குறுநில மன்னர்கள்
விடை:
ஆ) மூவேந்தர்கள்

**Question 2.**
சேரர்களில் புகழ் பெற்ற அரசராகக் கருதப்படுபவர் ________
அ) கரிகாலன்
ஆ) வல்வில் ஓரி
இ) சேரன் செங்குட்டுவன்
விடை:
இ) சேரன் செங்குட்டுவன்

**Question 3.**
சோழர்களின் துறைமுகம் ________
அ) காவிரிப்பூம்பட்டினம்
ஆ) சென்னை
இ) தொண்டி
விடை:
அ) காவிரிப்பூம்பட்டினம்

**Question 4.**
பாண்டியர்களின் கொடியில் இடம்பெற்றுள்ள சின்னம் ________ ஆகும்.
அ) மயில்
ஆ) மீன்

இ) புலி
விடை:
ஆ) மீன்

**Question 5.**
முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல் __________ ஆவார்.
அ) பாரி
ஆ) பேகன்
இ) அதியமான்
விடை:
அ) பாரி

## ஆ. பொருத்துக.

1. சேரர்கள் – வைகை
2. சோழர்கள் – பாலாறு
3. பாண்டியர்கள் – பொய்கை
4. பல்லவர்கள் – காவிரி

விடை:
1. சேரர்கள் – பொய்கை
2. சோழர்கள் – காவிரி
3. பாண்டியர்கள் – வைகை
4. பல்லவர்கள் – பாலாறு

## இ) குறுகிய விடையளி.

**Question 1.**
சேரர்களில் புகழ் பெற்ற அரசர்கள் யாவர்?
விடை:
இமயவர்மன், நெடுஞ்சேரவாதன், சேரன் செங்குட்டுவன்

**Question 2.**
'கடையேழு வள்ளல்கள்' என்போர் யாவர்?
விடை:
பேகன், பாரி, நெடுமுடிக்காரி, ஆய், அதியமான், நல்லி, வல்வில் ஓரி.

**Question 3.**
கரிகாலனின் சாதனைகளைக் குறிப்பிடுக.
விடை:
கரிகாலன் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று, அங்கு சிறைப் பிடிக்கப்பட்ட போர்க்கைதிகளைக் கொண்டு காவிரியின் மீது கல்லணையைக் கட்டினார். 2000 ஆண்டுகள் ஆகியும், கல்லணை இன்றும் கரிகாலனின் புகழ்பாடும் வண்ணம் மிகக் கம்பீரமாகக் காவிரி ஆற்றின் குறுக்கே காட்சியளிக்கின்றது.

**Question 4.**
பல்லவர்களின் தலை நகரத்தையும் கடற்கரை நகரத்தையும் குறிப்பிடுக.
விடை:
காஞ்சிபுரம் பல்லவர்களின் தலைநகரம் ஆகும்.
மகாபலிபுரம் பல்லவர்களின் கடற்கரை நகரம் ஆகும்.

ஈ.. யாருடைய கூற்று?

**Question 1.**
"யானோ அரசன், யானே கள்வன்".
விடை:
பாண்டியன் நெடுஞ்செழியன்.

## 4th Social Science Guide ஆற்றங்கரை அரசுகள் InText Questions and Answers

விடையளிக்க முயற்சி செய் பக்கம் 127

**Question 1.**
முற்கால சேரர்களில் புகழ் பெற்ற அரசர்கள் யாவர்?
விடை:
இமயவர்மன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன்.

**Question 2.**
இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட காப்பியத்தின் பெயர் என்ன?

விடை:
சிலப்பதிகாரம்.

## விடையளிக்க முயற்சி செய் பக்கம் 128

**Question 1.**
பண்டைய சோழ அரசர்களுள் புகழ் பெற்ற அரசர் -யார்?
விடை:
கரிகால் பெருவளத்தான்’ என அழைக்கப்பட்ட கரிகாலச் சோழர்.

**Question 2.**
சோழர்களின் தலைநகரம் மற்றும் துறைமுகங்களின் பெயர்களைக் கூறுக.
விடை:
உறையூர் சோழர்களின் தலைநகரமாகும். காவிரிப் பூம்பட்டினம் சோழர்களின் துறைமுகம் ஆகும்.

## விடையளிக்க முயற்சி செய் பக்கம் 129

**Question 1.**
சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாண்டிய மன்னன் யார்?
விடை:
சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாண்டிய மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகும்.

**Question 2.**
மதுரைக் காஞ்சி என்னும் நூலை இயற்றியவர் யார்?
விடை:
மதுரைக் காஞ்சி என்னும் நூலை இயற்றியவர் மாங்குடி மருதன்.

**Question 3.**
பாண்டியர்களின் கொடியில் குறிக்கப்பட்டுள்ள சின்னம் எது?
விடை:

பாண்டியர்களின் கொடியில் மீன் சின்னம் குறிக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடு 1 பக்கம் 130

பண்டைய தமிழ் பேரரசுகள் (மூவேந்தர்கள்) கோடிட்ட இடத்தை நிரப்புக
விடை:

| அரசுகள் | தலைநகரம் | துறைமுகம் | சின்னம் | புகழ்பெற்ற அரசர்கள் |
|---|---|---|---|---|
| சேரர்கள் | வஞ்சி | தொண்டி, முசிறி | வில் அம்பு | சேரன் செங்குட்டுவன் |
| சோழர்கள் | உறையூர் | காவிரிப் பூம்பட்டினம் | புலி | கரிகாலச் சோழன் |
| பாண்டியர்கள் | மதுரை | கொற்கை | மீன் | 1. தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்<br>2. பாண்டியன் நெடுஞ்செழியன் |

## செயல்பாடு 2 பக்கம் 130

மூவேந்தர்கள் ஆட்சிக்குட்பட்ட தற்போதைய தமிழக மாவட்டங்களைப் பட்டியலிடுக.
விடை:
சேரர்கள் : ஈரோட்டின் மேற்கு மாவட்டம், திருப்பூர், கோயம்புத்தூர், நீலகிரி.

சோழர்கள் : திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர், அரியலூர், கடலூர்

பாண்டியர்கள் : மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டம்.

## விடையளிக்க முயற்சி செய் பக்கம் 131

**Question 1.**
பல்லவர்களின் தலைநகரம் எது?
விடை:
காஞ்சிபுரம்

**Question 2.**
தமிழ்நாட்டில் தொண்டை மண்டலம்’ எந்த திசையில் அமைந்துள்ளது?
விடை:
தொண்டை மண்டலம் தமிழ்நாட்டின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.

## விடையளிக்க முயற்சி செய் பக்கம் 132

**Question 1.**
ஔவையாருக்கு நெல்லிக்கனியை வழங்கியவர் யார்?
விடை:
ஔவையாருக்கு அதியமான் நெல்லிக்கனியை வழங்கினார்.

**Question 2.**
மயிலுக்குத் தமது போர்வையை தந்தவர் யார்?
விடை:
பேகன் மயிலுக்குத் தமது போர்வையைத் தந்தார்.